# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 8 /2018**

கிளியூர் கிராம பொது மக்கள், சமூக ஆர்வலர்கள்,
முன்னாள் மாணவர்கள் சார்பாக
திரு. C. குமரேசன்,
த/பெ சின்னையா உடையார்,
கிளியூர் அஞ்சல், தேவகோட்டை தாலுகா,
சிவகங்கை மாவட்டம். . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. C. குமரேசன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலக வளாகம்,
சிவகங்கை – 630 562. . . . . . எதிர்மனுதாரர்
(திரு. S. அன்புநாதன், உதவி செயற்பொறியாளர்/தேவகோட்டை &
திரு. S. டைடஸ், உதவி பொறியாளர்/கிராமப்புறம்/தெற்கு/தேவகோட்டை)

**கேட்புரை நாள் – 05.06.2018**

**ஆணை நாள்: 06.06.2018**

1. கிளியூர் கிராம பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் சார்பாக திரு. C. குமரேசன், த/பெ சின்னையா உடையார், சிவகங்கை மாவட்டம். அவர்களின் 7.11.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 8/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் தேவகோட்டை வட்டம், கற்களத்தூர் குரூப் பெரிய கிளியூர் கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப தொடக்கப்பள்ளிக்கு பின்புறம் மின்கம்பம் ஒன்று உள்ளதாகவும், மேற்படி மின்கம்பத்திலிருந்து ஒரு நபரான நல்லையா உடையார் வீட்டிற்கு முன் உள்ள கம்பத்திற்கு மின் கம்பி செல்வதாகவும், ஆனால் அந்த கம்பத்தில் மின் விளக்கு எதுவும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார். மேற்படி கம்பி அறுந்து விழும் நிலையில் மிகவும் அபாய நிலையில்

உள்ளதாகவும் அப்படி விழுந்தால் பள்ளிக்குழந்தைகளுக்கு உயிர் பாதிப்பு ஏற்படுவதோடு அந்த வழியாகச் செல்லும் முதியோர்கள், கால்நடைகளுக்கு உயிர் பாதிப்பு ஏற்படும் என்றும் ஆட்சேபனை தெரிவித்து மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளனர்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 22.2.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. எதிர் மனுதாரரான மேற்பார்வை பொறியாளர்/சிவகங்கை மின்பகிர்மான வட்டம் அவர்கள் தனது 21.4.2018 நாளிட்ட கடிதத்தில் உதவி செயற்பொறியாளர்/பகிர்மானம்/தேவகோட்டை அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு பெறப்பட்ட கீழ்கண்டவாறு விவரங்களை தெரிவித்துள்ளார்.

(1) மனுதாரர் தெரிவித்த மின் கம்பம் நல்ல நிலையில் உள்ளது

(2) மின்கம்பி பாதுகாப்பான உயரத்தில் உள்ளது

(3) மின்கம்பி அறுந்துவிழும் நிலையில் இல்லை.

(4) தண்ணீர் தேங்கி இருப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை

(5) பள்ளிக்கூடத்தின் பின்பகுதியில் பாதுகாப்பாக 5 மீட்டர் தொலைவில் மின்கம்பம் உள்ளது

5. எனவே, மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 05.06.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6 கிளியூர் கிராம பொது மக்கள், சமூக ஆர்வலர்கள், முன்னாள் மாணவர்கள் சார்பாக மேல்முறையீட்டாளர் திரு. C. குமரேசன் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. அன்புநாதன், உதவி செயற்பொறியாளர்/ தேவகோட்டை மற்றும் திரு. S. டைடஸ், உதவி பொறியாளர்/கிராமப்புறம்/தெற்கு/தேவகோட்டை ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

8. கேட்புரை நாளில் எதிர்மனுதாரர்கள் மேற்முறையீட்டாளரிடம் புகார் செய்யப்பட்ட மின் கம்பியானது பாதுகாப்பான உயரத்தில் நல்ல நிலையில் இருப்பதாகவும், மேற்குறிப்பிட்ட மின் கம்பியில் தற்பொழுது மின்னூட்டம் இல்லாத வகையில் தற்காலிக துண்டிப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் எதிர்காலத்தில் ஏதேனும் மின் இணைப்பு புதியதாக வழங்கப்படும் போது இணைப்பு இல்லாத புதிய மின்கம்பிகள் அமைத்து மின் இணைப்பு தரப்படும் என்றும் தெரிவித்தனர்.

9. மின் கம்பி பாதுகாப்பான நிலையில் வைக்கப்படும் என்ற எதிர்மனுதாரர்களின் உறுதிமொழிக்குப்பின் மேல்முறையீட்டாளர் மின்குறைத்தீர்ப்பாளரிடம் எதிர்மனுதாரர்களின் பதிலுரை தனக்கு ஏற்புடையதாக இருப்பதால் தன்னுடைய மேல்முறையீட்டு மனு எண்.8/2018–ஐ திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் 05.06.2018 நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ஐயா*

*பொருள்– அறுந்து விழும் நிலையில் உள்ள மின்கம்பியை சரி செய்ய கோரிய மனு தொடர்பாக கீழ்கண்ட எனது கருத்தை பின்வருமாறு பதிவு செய்கிறேன்.*

*இன்றைய கூட்டத்தில் மின் வாரிய தரப்பில் தெரிவித்த கருத்துக்கள்படி மின்பாதையும் பாதுகாப்பாக உள்ளது என்பதை நான் உறுதி படுத்துகிறேன்.*

*எனவே, நான் தெரிவித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்பதை உறுதிபட தெரிவிக்கிறேன்.*

*இப்படிக்கு*
*தங்கள் உண்மையுள்ள*
*ஒப்பம்/ XX XX XX*
(C. குமரேசன்)
*கிளியூர் பொதுமக்கள் சார்பாக”*

10. கேட்புரை நாளில் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக ஆஜரான மேல்முறையீட்டாளர், தனது 05.06.2018 நாளிட்ட எழுத்துப்பூர்வமான கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சம்மந்தப்பட்ட மின்பாதை இன்றைய கட்டத்தில் பாதுகாப்பாக உள்ளது என்று தெரிவித்து தன்னுடைய புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை

என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.8/2018 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. C. குமரேசன்,
த/பெ சின்னையா உடையார்,
கிளியூர் கிராம பொது மக்கள், சமூக ஆர்வலர்கள்,
முன்னாள் மாணவர்கள் சார்பாக
கிளியூர் அஞ்சல், புலியால் (வழி),
தேவகோட்டை தாலுக்கா,
சிவகங்கை மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலக வளாகம்,
சிவகங்கை – 630 562.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.